**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ. எண்.17** **நாள்: 02.02.2018**

**சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் (Smart City) கீழ் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ரூ.36.54 கோடி மதிப்பீட்டில் தியாகராய சாலை மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பில், பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணியை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.**

-----

சென்னை சீர்மிகு நகரத் திட்டத்தின் (Smart City) கீழ் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (02.02.2018) தியாகராய சாலை மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பில், ரூ.36.54 கோடி மதிப்பீட்டில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் பணியை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்த்தன் அவர்கள், தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.சத்தியநாராயணன் அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப. அவர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி அவர்கள், மேற்பார்வை பொறியாளர் திரு.எல்.நந்தகுமார் அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

தியாகராய சாலை பாண்டி பஜார் பெருவாரியான மக்கள் வந்து செல்லும் சாலையாக இருப்பதால் அவர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு போதுமான இடவசதி இல்லை. வாகனங்கள் பாண்டி பஜார் சாலையின் வாகனப் பாதையில் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் வகையில், தியாகராய சாலையில் மண்டலம்–10, கோட்டம்–136ல் தியாகராய சாலை மற்றும் தணிகாசலம் சாலை சந்திப்பில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்க உத்தேசிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு முதல் இப்பணிக்கு கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டு வடிவமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 24.05.2017 அன்று சென்னை சீர்மிகு நகர நிர்வாக குழுவிடமும் 09.06.2017 அன்று உயர்மட்ட குழுவிடமும் ஒப்புதல் பெறப்பட்டு 05.09.2017 அன்று ஒப்பம் கோரப்பட்டது. பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் இடமானது 1,488 ச.மீ (16,146 ச.அ) பரப்பளவு கொண்டதாகும். இங்கு ஏற்கனவே பாழடைந்த நிலையில் இருந்த பெருநகர சென்னை மாநகராட்சியின் மின் சாதன கிடங்கு இடிக்கப்பட்டு, பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கப்படவுள்ளது.

இந்த பல அடுக்கு வாகன நிறுத்தத்தில் 2 கீழ்தளம், தரைத்தளம் மற்றும் 6 தளங்கள் கொண்ட கட்டிடமாக அமைக்கப்படவுள்ளது. 2 கீழ்தளத்தில் தோராயமாக 550 இருசக்கர வாகனமும், தரைத்தளம் மற்றும் 6 மேல்தளத்தில் 250 நான்கு சக்கர வாகன நிறுத்தம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது முற்றிலும் தானியங்கி முறையில் செயல்படும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், பேரிடர்களை சமாளிக்கும் வகையில் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டு ரூ.36.54 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அன்று வழங்கப்பட்டுள்ளது. இது சீர்மிகு நகர திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடப்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**